ஸ்ரீ தந்வந்த்ரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை


பிரமாதீச
கார்த்திகை

டிசம்பர்
1973





தொகுதி 35
பகுதி 12

Vol 35
No 12



ஆசிரியர் & பிரசுரகர்த்தா

வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.



| | |
|---|---|
| பட்டினியால் உடல் நிறைக் குறைவு | ... 219 |
| பரமௌஷதம் | ... 222 |
| திரிதோஷ வர்க்க அமைப்பு | ... 226 |
| பால சிகித்ஸா | ... 230 |
| தோஷங்களின் மல நிலை | ... 233 |



வருஷச் சந்தா
ரூ 5/-

Annual
Subscription
Rs. 5/-

காரியாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

# வைத்யரத்னம் P. S. வாரியருடைய
# ஆர்ய வைத்தியசாலா
## கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன்: கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ் ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31

| | | |
|---|---|---|
| நர்ஸிங்ஹோம் | | போன் நெ. 44 |
| தலைமை வைத்யர் | | போன் நெ. 25 |
| மானேஜிங் டிரஸ்டி | (வீடு) | போன் நெ 27 |
| | (ஆபீஸ்) | போன் நெ 61 |
| மானேஜர் | (வீடு) | போன் நெ. 26 |

**சென்னை கிளை:**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண 811275

**மற்ற கிளைகள்:**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணுகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும் கிளைகளிலும் கிடைக்கும் எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜுபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

**மானேஜிங் டிரஸ்டி.**
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.



ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை

| | | |
|---|---|---|
| தொகுதி 35 | பிரமாதீச - ஐப்பசி | பகுதி 12 |
| Vol. 35 | டிசம்பர் 1973 | No. 12 |


# பட்டினியால் உடல் நிறைக்குறைவு

தொடர்ந்து உண்ணுவிரதம் முதலிய வகையில் பட்டினி கிடப்பதால் உடலில் தாதுபாக பரிணுமங்களுக்குத் தேவையான உணவு வெளியிலிருந்து உட்செலுத்தப்படாததால், உடலில் சேமிக்கவைக்கப்பட்டுள்ள கபாம்சமான தாதுக்களே மற்ற தாதுக்களுக்கு ஆஹாரமாகி உடல் இளைக்கவும் நிறைகுறையவும் ஆரம்பிக்கின்றன. இந்நிலையைக் குறிப்பிடும்போது வாக்படர்,

> ஆஹாரமக்நி: பசதி தோஷாநாஹார வர்ஜித:
> தாதூந்க்ஷிணேஷு தோஷேஷு ஜீவிதம் தாதுஸம்க்ஷயே
>
> அ 2-ஹிருதயம் சி. 10.

ஆஹாரத்தைப் பக்குவப்படுத்தும் ஜடராக்னி, உணவு கிடைக்காதபோது உடலில் சேர்ந்துள்ள கபாம்சமான ஆமம் அதிகமாக உள்ள மேதஸ் முதலியவைகளை தனது எரிப்பிற்கு விறகாக ஆக்கிக் கொள்கின்றது. அவையும் குறைந்தபின் உயிருக்கே ஆபத்து வருகிறது எனக் கூறுகிறுர். அதனுல்தான் லங்கன சிகித்ஸை செய்யும்போது லங்கனத்தின் ஓர் அம்சமான உபவாஸம் முதலியவைகளின் அளவை

> ப்ராணுவிரோதிநா சைனம் லங்கனேனுேபபாதயேத். ச சி. 3.

எனக் குறிப்பிடுகிறுர்கள்; உடல் வலிவிற்குக் குறைவு ஏற்படா வண்ணம் உபவாஸங்களிருத்தல் தகும். தற்காலத்தில் அரசியல்

சூழ்நிலை முதலிய விஷயங்களில் சில நிர்பந்தங்களை ஏற்படுத்த ஒருவன் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முற்படுகிறான். அப்போது அவன் சரீரத்தில் ஏற்படும் க்ஷயம் எத்தகையது என்பதை ஆராயலாம்.

உபவாஸம் ஆரம்பித்த உடனேயே முதலில் எடை கிரமமாகக் குறைகின்றது. உடற்சூடு முதலில் அதிகமாகின்றது. பிறகு கிரமமாகக் குறைகின்றது. ஆமபாகத்திற்காகவும் தாது பாகத்திற்காகவும் பாசகபித்தம் – தாத்வக்னிகள் தீவிரமாக முற்பட்டுப் பிறகு தணிகின்றன. இந்தத் தாபத்தைக் குறைக்காமல் ஏதாவது செயற்கையாகச் சூட்டைச் சற்று அதிகமாக்கி வளர்த்தால் உடல் தேய்வு தாமதப்படும். உடலில் ஜலாம்சம் வரவரக் குறையும். இதைத் தவிர்க்க ஜலம் மாத்திரம் குடித்து வந்தாலும் தேய்வைச் சிறிதளவு குறைத்துவிடலாம். யௌவன வயதிலுள்ளவனைவிட கிழவனுக்குச் சீக்கிரம் தேய்வு ஏற்படுகின்றது.

சரீரத்திலுள்ள ஆம அம்சங்கள் அனைத்தும் முதலில் பாகமாகி மலமான அம்சங்கள் மிகக்குறைவாக வெளியேற்றப்படுகின்றன. பிறகும் உணவு கிடைக்காவிடில் உடலில் மேதஸ் அனைத்தும் பாகமடைகின்றது அதுவும் குறைந்ததும் சரீரத்திலிருந்து போஷகமாக விருக்கும் மலாம்சங்களும் பாகமடைந்து வரண்டுவிடுகின்றன.

தாதுக்கள் குறையும்போது சிற்சில அவயவங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. உடலில் தாரணத்திற்கு முக்கியமான ஹிருதயம் யகிருத் முதலிய அங்கங்கள் தளராதிருக்கும்படி, மற்ற அவயவங்கள் பாசகாக்னிக்கு விருந்தாகின்றன. அதனால் சாகும் வரை ஹிருதயத்திற்குத் தேய்வே ஏற்படுவதில்லை. இதை ஆராய்ந்த Voit என்பவரின் கணக்குப்படி உடல் தேய்வு இவ்விதம் சதவிகிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| எலும்பு | 5·4 | அண்டகோச கிரந்தி | 0·1 |
| தசை | 42·2 | குடல் | 2·0 |
| கல்லீரல் | 4·8 | மூளை | 0·1 |
| விருக்கம் | 0·6 | தோல், கேசங்கள் | 8 8 |
| மண்ணீரல் | 0·6 | மேதஸ் | 26·2 |
| அக்னியாசயம் | 0·1 | ரக்தம் | 3·7 |
| ச்வாஸாசயம் | 0·3 | மற்ற எல்லா அவயவங்களின் தாதுக்கள் | 5·0 |
| ஹிருதயம் | 0·0 | | |

நாட்பட்ட நோய்களில் அரோசகம் அக்னிமந்தம் முதலியவைகளால் தேவையான அளவில் உணவு உட்செலுத்தப்படாவிடில் உடலின் முக்கிய ஜீவனமான ஆசயங்களுக்கு வலுக்குறைவு ஏற்படாதிருக்க புறத்தவயவங்கள் பாதிக்கப்படுவது காரணமாக

முதலில் தோல் கேசங்கள் முதலியவை பாதிக்கப்படுகின்றன. தலை மயிர் உதிர்தல், வளர்ச்சிக்குறைவு, நிறம் மங்குதல் முதலியவை ஏற்படுகின்றன. அங்கும் கிரமமாக கபாம்சமான தாதுக்கள் பாக மடைந்து குறைவதால் உடல் தேய்வும் நிறைக்குறைவும் கிரமமாக ஏற்படுகின்றன. தாதுக்களும் கபபித்த தோஷங்களும் குறையும் நிலை வாயு வளரப்போதுமான சூழ்நிலையை ஏற்படுத்துகின்றது. தாது க்ஷயம் வாதப்பிரகோபத்திற்கு முக்கிய காரணம். தாது பாகத்திற்கு வேண்டிய உணவு கிட்டாது தனித்து எரிந்துகொண்டிருக்கும் அக்னியை முதலில் தாதுக்ஷயத்தால் விருத்தியடைந்த வாயு அதிகப்படுத்திவிட்டாலும், பிறகுக் குறைவால் அக்னி சக்தி குறைந்து விடுகின்றது. இதையே ஆஹாரத்தின் ஹீநயோக லக்ஷணம் குறிப்பிடும்போது சரகர் கூறுகிறார்.

> தத்ர ஹீனமாத்ர மாஹாரராசிம் பல வர்ண உபசய
> க்ஷயகரம் உதாவர்த்தகரம் அநாயுஷ்யவ்ருஷ்யம்
> அனௌஜஸ்யம் சரீர மனோபுத்தி இந்திரிய உபகாதகம்
> ஸாரவிதமநம் அலக்ஷ்ம்யாவஹம் அசிதேச்ச வாதவிகாராணும்
> ஆயதநம் ஆசக்ஷதே. சரக. விமானம் 2 அ.

[ மூலம்–சரகஸம்ஹிதை–அஷ்டாங்கஹிருதயம்-ஆயுர்வேதீயகிரியா சாரீரம் ]

---


# நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்

N. வைத்யநாதன், R. M. P.

# பரமௌஷதம்

(வைத்ய பிந்து மாதவ பண்டிதர், நாஸிக்)

[நோயற்ற வாழ்வின் பாதுகாப்பிலும் ஆரோக்யவளர்ப்பிலும் சிறந்த உணவுப் பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சித் தொகுதியில் நல்லெண்ணெய் நெய் தேன் என்ற இம்மூன்று பொருள்களும் அளிக்கும் உதவியை இந்தக் கட்டுரையில் ஆசிரியர் விவரித்துள்ளார். ஒவ்வொரு வைத்யரும் கையாண்டு அபிவிருத்தி செய்யவேண்டிய வழி இது. ஆசிரியர்.]

சரீரஜானும் தோஷாணாம் க்ரமேண பரமௌஷதம்
பஸ்தி: விரேகோ வமநம் ததா தைலம் கிருதம் மது

என்று வாக்படரின் சிகித்ஸா ஸூத்ரம் குறிப்பிடுகிறது. உடலை பாதிக்கும் வாதபித்த கபநோய்களுக்கு முறையே பஸ்தியும் விரேசனமும் வமனமும் அவ்விதமே எண்ணெய்யும் நெய்யும் தேனும் சிறந்த ஔஷதங்களாகின்றன. ஆயுர்வேதத்தில் ஸ்வஸ்தனுக்கான வழிகள் எவ்வழியில் அமைந்துள்ளன என்ற எனது வெகு நாளைய ஆராய்ச்சிகளுக்கு ஓர் முடிவை ஸமீபத்தில் நான் காண நேர்ந்தது. அது தான் வாக்படரின் சிகித்ஸா ஸூத்ரத்தில் காணும் குறிப்பு. அதன் விரிவுரை தான் இக்கட்டுரையின் நோக்கம்.

எனது நெருங்கிய நண்பருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்து முதல் ஆண்டு பூர்த்தி விழாவின்போது ஏதாவது ஒரு அன்பளிப்பு கொடுக்கவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. குழந்தைகளில் ஒன்று பெண், மற்றொன்று ஆண். மிகவும் இளைத்துத் துர்பலமானவை. துர்பலமான ஒரு வயதுள்ள குழந்தைகளுக்கேற்ற தின்பண்டத்தைப் பற்றி யோசிக்கையில் பிஸ்கட் சாக்லேட் போன்றவை வைத்யனால் கொடுக்கத் தக்கவையல்ல என்ற யோசனை எழுந்ததின் பேரில் அச்சிசுக்களுக்கு நல்ல பல புஷ்டியளிப்பவை எவை என்ற சிந்தை எழுந்தது.

சிசுக்களுக்குத் தேனையும் நெய்யையும் கலந்து கொடுக்கும் கௌமாரபிருத்ய உபதேசம் ஞாபகத்தில் வந்தது. தாய்க்குப் பால் ஊறுதவரை தேன் நெய் கலவை கொடுப்பது உண்டு. இது நல்ல பித்த கப சமனமாகும். வாத சமனமும் சேரவேண்டுமானால் தைலமும் (எண்ணெய்யும்) சேர்க்கப்படவேண்டும். சியவனப்ராசம், அகஸ்திய ஹரீதகீ, வஸிஷ்ட ரஸாயனம், ஆமலக

ரஸாயனம் போன்ற ரஸாயனயோகங்களில் இம்மூன்றையும் கலந்திருப்பதும் கவனத்திற்கு வந்தது. இந்த அடிப்படையில் சிசுவிற்கு ருசிக்க வேண்டிய இனிப்புள்ளதாக்க தேன் 2 அவுன்ஸ், நெய் 1 அவுன்ஸ் நல்லெண்ணெய் 1 அவுன்ஸ் இம் மூன்றையும் கலந்து வாக்படர் அளித்த சிறப்புப் பெயரை 'பரமௌஷதம்' என்பதையே அதற்குமிட்டேன். பாட்டிலிலிட்டு இம்மூன்றையும் குலுக்கியதில் வெள்ளை ரோஜா நிறத்தில் அவலேஹம் (நாக்கால் சப்பி சாப்பிடக்கூடிய இளகிய லேகியப்பதம்) தயாரானது. இதையே எனது அன்பளிப்பாக சிசுக்களிடம் கொடுத்தேன்.

குழந்தைகளின் தகப்பனுர் என்னிடம் மிகுந்த விச்வாஸமுள்ளவராகையால் இதை தினமும் சிசுக்களுக்கு 1 ஸ்பூன் (½ தோலா) அளவு காலை மாலை கொடுத்து வந்தார். குழந்தைகளும் விரும்பி இதைச் சாப்பிட்டன. நல்ல பசி, தூக்கம், மலமூத்திரங்கள் சரியாக வெளியேற்றம் இவைகளில் திருப்திகரமான மாற்றம் தெரிந்ததும் சிசுக்களின் தந்தையார் இதையே தொடர்ந்து என்னிடமிருந்து பெற்றுக் கொடுத்து வந்தார். அதனுல் குழந்தைகளின் எலும்புகளுக்கு வலுவும் தசைகளில் புஷ்டியும் தலையில் கரும் கேசங்களும் ஏற்பட்டன. பற்கள் நன்கு முளைத்தன. அப்போது வரும் உபத்ரவங்கள் ஒன்றையும் காணேம்.

இந்த அனுபவத்தை மேலும் பரிசோதனை செய்ய நாஸிக்கிலுள்ள ஆயுர்வேத ஸேவாஸங்கத்தின் சார்பில் நடக்கும் ஆரோக்ய சாலையிலும் பிரஸவவிடுதியிலும் இதைப் பரீக்ஷித்துப் பார்த்ததில் நல்ல த்ருப்திகரமான முன்னேற்றம் காணப்பட்டது.

பரமௌஷதம் நல்ல பிரும்ஹண (உடலைப் பருக்கவைக்கும்) கல்பமாகப் புலப்பட்டது. ஸௌம்யமானது. பிறந்த சிசுவிற்கு முதல்பத்து நாட்கள் வரை தினமும் கொடுத்து வந்தோம். தாய்க்கும் ஸ்னேஹனத்திற்காக இதையே கொடுத்தோம். கர்ப்பிணிக்கும் கர்ப்பமும் தாயும் ஸமமான வளர்ச்சியும் ஆரோக்யமும் பெறுவதற்கு இதைக் கொடுத்தோம். எங்கும் நல்ல பலன் கிட்டியது. ஸகந்ததஜ்வர (டைபாய்டு போன்றவை) த்திற்குப் பின்னர் ஆரோக்ய விருத்திக்காகவும் இதைக் கொடுத்தோம். குழந்தை பிறந்ததும் தாயின் ஆரோக்யக் குறைவால் சிசுக்கள் பலம் குன்றுவதைத் தடுக்க தாய்க்கு இதைக் கொடுத்தோம். எங்கும் நல்ல பலன் கிடைத்தது. பிறகு வாதபித்தகபங்களின் நிலையை அனுஸரித்து நெய் தேன் எண்ணெய் இவைகளின் அளவைக் கூட்டியும் குறைத்தும் உபயோகித்ததில் திரிதோஷ தத்துவத்தையே

நன்கு அனுபவிக்கும் அளவிற்கு இதன் உபகாரம் புலப்பட்டது. இதன் பிறகு அமராவதியிலுள்ள ஆயுர்வேத தீர்த்த வைத்ய ஸ்ரீ திரியம்பகராவ்ஜீ கோகடே அவர்களும் அவரது மனைவியார் டாக்டர் ஈசதயாபாயீகோகடேயும் இதைத் தமது பிரஸவவிடுதியிலும் ஆரோக்யசாலையிலும் உபயோகித்து வருகிறார்கள். அவர்களது பரீக்ஷையில் அவர்கள் இது பொதுவான சிகித்ஸையிலும், சிசுக்களின் புஷ்டி சிகித்ஸையிலும் நோய் தடுப்பிலும் பெருமளவில் உதவுவதாகக் கண்டிருப்பதாக எனக்கு எழுதியுள்ளனர்.

இதன் பின் வமனம் விரேசனம் போன்ற பஞ்சகர்ம சிகித்ஸைகளுக்கு முன்னர் செய்யவேண்டிய ஸ்னேஹன சிகித்ஸையாக முதல் தினம் இதில் 2 அவுன்ஸும், மறுதினமும் மூன்றாவது தினமும் 3 அவுன்ஸும் கொடுத்தோம். கக்குவான் இருமல், குழந்தைகளுக்கு வரும் இழுப்பு இவைகளில் தோஷ சுத்தி புஷ்டிக்காக இதை உபயோகித்தோம்.

இன்னும் பலர் தமது அனுபவத்தை எனக்கு எழுதியுள்ளனர். வைத்ய ஸ்ரீ G. P. காமத்தும் வைத்ய ஸ்ரீமதி கமலா பாயீகாமத்தும் எழுதியுள்ள கீழ்கண்ட அனுபவக் குறிப்பு மிகவும் கவனிக்கத் தக்கது. "சில விஷயங்கள் முதல் பார்வையில் அல்பமாகத் தோன்றும். ஆனல் அனுபவத்தில் அதன் பலன் நல்ல முறையில் காணும். பரமௌஷதக் கலவை இத்தகையது. இவை வீட்டில் ஸஹஜமாகக் கிடைக்கும் பொருள்கள். வாத பித்த கபங்களின் விஷம நிலையில் இவை ஔஷதமாகவோ உணவாகவோ அனுபானமாகவோ ஏற்கப்படுபவை. தோஷங்களை இளக்கி வெளிப்படுத்துவதை முக்கியமாகக் கொள்ளாதவையும் தோஷங்களைக் கிளப்பி விடாதவையும் விஷம நிலையிலுள்ளவைகளை ஸம நிலைக்குக் கொணருபவையுமான ஔஷதங்கள் சமன ஔஷதங்கள் எனப்படுகின்றன. பரமௌஷதம் இவ்வகுப்பைச் சார்ந்தது. அக்னி மந்தமோ தீக்ஷ்ணாக்னியோ ஏற்பட்ட நிலையில் பரமௌஷதம் நன்கு உதவுகின்றது. வயிற்றில் புளிப்பு மிகும் போது அக்னிசக்தியைச் சரி செய்தும் குறைத்தும் மந்தாக்னியில் அக்னிசக்தியைத் தூண்டியும் உதவுகின்றது. ஆக இது அக்னி சக்தியைக் கட்டுப்படுத்திச் சமநிலையில் ஸ்திரப்படுத்துவதில் சிறந்து விளங்குகின்றது."

"பரமௌஷதம் உணவு, மருந்தும் கூட. இத்துடன் பால் முதலிய எந்த உணவுப் பொருளையும் சேர்த்துக் கொள்ளலாம். சிலர் நல்ல பசி இருந்தும் நன்கு சாப்பிட்டும் புஷ்டி ஏற்படாமல்

இருக்கின்றனர். இவர்களுக்கு ஸ்தூலமான கோஷ்டாக்னி நன்கு இருக்கும். ஸூக்ஷ்மாக்னியான தாத்வக்னி சரியே இருக்காது. தைலகிருதமதுயோகம் விகாசியானபடியால் (உள் தாதுக்களிலே பரவி ஸ்ரோதஸ்களை சுத்தி செய்து வியாபிக்கும் சக்தியுள்ள படியால்) தாத்வக்னியும் சரியாகி புஷ்டி ஏற்படுகின்றது.''

''மார்புக்கூடு முன்கூடி எலும்புகளின் சக்தி குறைந்து காணும் சிசுக்கள், அகாலத்திலேயே கிழத்தனம் அடைந்த வாலிபர்கள், மண் தின்பதால் ஏற்படும் சோகை, எலும்பு க்ஷயம் இவைகளில் நல்ல குணம் தருகிறது. பிரஸவவிடுதியில் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஒன்று 3 பவுண்டும் மற்றொன்று $2\frac{3}{4}$ பவுண்டுமிருந்தது. தானே தாய்ப்பாலைச் சாப்பிட முடியாத நிலையில் வெளி உணவைக் கொடுத்தால் ஏற்குமோ என்ற சந்தேகத்தின் பேரில் பரமௌஷதம் கொடுத்ததும் நன்கு பலம் தந்து குழந்தைகள் விரைவில் புஷ்டியடைந்தன.''

மற்றொரு இரட்டை பிரஸவம் 8-வது மாதத்திலேயே ஏற்பட்டதனால் இரண்டும் குறைந்த எடையில் வெளிப்பட்டன. இரண்டும் எடையில் ஒன்றாகத்தானிருந்தன. அதில் ஒன்றுக்கு மாத்திரம் பரமௌஷதம் கொடுத்ததில் 10 நாட்களுக்குள் அதன் எடை $\frac{1}{4}$ பவுண்டு கூட ஆனது.''

''ஒரு கர்ப்பிணிக்கு உடல் நிலை மிகவும் துர்பலமடைந்து அவள் நகரவோ உட்காரவோ நடக்கவோ முடியாமலிருந்தாள். பட்டினி கிடந்து வாடியிருந்ததால் ஏற்பட்ட களைப்புதான் காரணம். பிரஸவ விடுதியில் சேர்த்தபின் தொடர்ந்து பரமௌஷதம் ஒரு டீஸ்பூன் கொடுத்து வந்ததில் 2–3 நாட்களுக்குள் பசி நன்கு ஏற்பட்டு முகம் தெளிவடைந்தது. பிறகு கிரமமாக அளவை 2-3 டீஸ்பூன் வரை அதிகப்படுத்தியதில் தென்பு ஏற்பட்டு நடமாட்டம் ஏற்பட்டு பிரஸவமும் ஸுகமாக ஆகியது. தாதுபுஷ்டிக்கு இதை நன்கு உபயோகிக்கலாம்.''

ஸ்ரீ காமத்தின் இவ்வபிப்பிராயங்கள் ஒவ்வொரு வைத்யராலும் அனுபவிக்கத் தக்கவை. இவை தனிப்பட்ட நெய் தேன் நல்லெண்ணெய் இவைகளின் சேர்க்கையாலானவையே. இவைகளையே வியாதிக்கேற்றவாறு தயாரிக்கப்பட்ட தைலகிருதங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டால் குணம் அபரிமிதமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. — ஸசித்ர ஆயுர்வேத.

---

# திரிதோஷ வர்க்க அமைப்பு

வாத பித்த கபங்களின் சாஸ்திரீயமான ஸித்தாந்தங்களை மனதிற்கொண்டு நோக்கும்போது வாயு-பித்தம்-கபம் என்று தனிப்பட்ட ஒரு பொருள் இருப்பதாகக் கூறுவதைவிட சரீரத்தில் உள்ள பல அம்சங்களில் ஒரேவிதமான தன்மையுடையதும், ஒரே தன்மையுடைய பொருளால் அல்லது செயலால் அளவில் அதிகமாகியோ குறைந்தோ போவதும், ஆனால் தனித்தனி உருவில் இருப்பதுமான பொருள்கள் அனைத்தும் ஒரே வர்க்கத்தில்—தொகுப்பில் தொகுக்கப்பட்டு வாயு (வாயுவர்க்கம்) பித்தம் பித்தவர்க்கம்) கபம் (கபவர்க்கம்) என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ளன என்றே புலப்படுகிறது இதை ஆராய்வோம்.

உலகில் எந்தப்பொருளை நோக்கினும் அதன் உற்பத்தியிலும் இருக்கையிலும் மூன்று பொருள்கள் தேவைப்படுகின்றன. (1) அதன் உற்பத்தியிலும் இருக்கையிலும் நேரிடையாகப் பங்கு கொள்ளும் பொருள். 2) அந்தப் பொருளைத் தேவையானபடி உபயோகப்படத் தகுதி கொடுக்கும் பொருள். (3) அந்தச் செயலைச் செயலாற்றவும் கட்டுப்படுத்தவும் உள்ள பொருள். இந்த மூன்று செய்கைகளில் சிலசமயம் ஒரேபொருளே இரு செயல்களைக்கூட செய்வதாக இருப்பினும் இந்த மூன்று நிலைகள் தனித்து அவசியம் தேவைப்படுகின்றன.

நமது சரீர உற்பத்தி—ஸ்திதியிலும் இந்த மூன்று பொருள்கள் தேவை. முதலில் சரீரத்தில் பிரதிக்ஷணமும் உற்பத்தியும் புஷ்டியும் தேய்வை ஈடுசெய்யும் தன்மையுள்ள பொருள் தேவையாக இருக்கிறது. இரண்டாவதாக உற்பத்தி—புஷ்டிக்கான பொருள்களைத் தேவைக்கேற்றவாறு—சரீரத்திற்கொத்தவாறு மாற்றி அமைத்துக்கொடுக்கும் பொருள் அவசியமாகிறது மூன்றாவது இந்த இருவகைப் பொருள்களின் அளவையும் அதன் செய்கைகளின் அளவையும் கட்டுப்படுத்தும் தன்மையுள்ள பொருள் தேவையாக இருக்கின்றது. சரீர யந்திரத்தில் இத்தகைய பொருள்களாக விளங்குபவை கப பித்த வாதங்களாகும்.

சரீரத்திலுள்ள அளவுகடந்த ஸூக்ஷ்மமான கோசங்களைத் தன் தன் இயற்கைச் செயல்களைப் புரியச் செய்ய இடைவிடாது அவைகளின் தேய்வைப் பூர்த்தி செய்து புஷ்டி பலமளிப்பது உணவின் ஸாரமான ரஸதாதுவெனினும், அந்த ரஸதாதுவின் பரம ஸூக்ஷ்மாம்சமான கபம்தான் இப்பணியில் முக்கியமாகும்.

இதைத் தவிர ஸ்தூலமாகவும் ஸூக்ஷ்மமாகவு மிருந்து இந்த கப கார்யத்தைச் செய்பவையனைத்தும் கபமே. ஆக. கபமானது புஷ்டி, நிறைவு, நெய்ப்பு, பலம் (களைப்பை நீக்குவது; ரோகத் தடுப்பு சக்தியை அளிப்பது) இவைகளை அளிக்கிறது. உடலிலுள்ள கபாம்சம் தகுந்த அளவில் இருந்தால் உடலில் பித்தத்தால் ஏற்படும் தேய்வையும் வாதத்தால் ஏற்படும் வரட்சியையும் ஈடு செய்கிறது,

போஷணத்திற்காகவும் தேய்வை நிரப்புவதற்காகவும் கிடைக்கும் கபப்பொருளை சரீரத்திலுள்ள போஷ்யமான அணு கோசங்களுக்கேற்றவாறு மாற்றிப் பக்குவப்படுத்திக் கொடுப்பது பித்தமாகும். பித்தம் புரியும் இந்தச் செயல் பாசனமாகும். இதன் விளைவே உடலின் சூடும் எரிவும்.

கபபித்தங்களை அந்தந்த ஸ்தானத்திற்குக் கொணர்ந்து அவை களின் செயலைக் கட்டுப்படுத்தி உதவுவது வாயுவாகும்.

இம் மூன்று அம்சங்களையும் சரீரத்தின் ஒவ்வொரு பரமாணு விலும் பார்க்க முடிவது போல, யகிருத் பிலீஹம், புப்புஸம், ஹிருதயம் போன்ற பெரிய ஆசயங்களிலும், தலை உடல் கை கால்கள் ஆகிய உறுப்புகளிலும் காணலாம்.

நவீன வைத்ய பரிபாஷயில் இதை விளக்கும்போது, சரீரத்தில் உள்ள பல்வேறு நர்வ் எனப்படும் நரம்புகள் எந்த வாயு அல்லது அதற்குச் சமமான பொருள்கள் இருப்பதால் வேலை செய்கின்றனவோ ; அந்தப் பொருள் அனைத்தும் வாயுவின் ஒரு அம்சமாகும். முகம், வயிறு சரீர பரமாணுக்கள் இவைகளில் உணவு -ரஸம் ரக்தம் முதலியவைகளைப் பாகம் செய்யும் என்ஸைம் முதலிய எல்லா பாசகப் பொருள்களும் பித்தத்தின் அம்சங்கள். சரீரத்தில் நெய்ப்பும் புஷ்டியும் பலமுமளிக்கும் எல்லா அம்சங்களும் ச்லேஷ்மா (Inter cellular material) புரதம், லைபாய்ட் (Lipoid) ச்லேஷகம் (Synovial fluid) தர்பகம் (cerebro-spinal fluid) முதலியவை கபத்தின் அம்சங்கள்.

ஆக இந்த நோக்கில் வாயு பித்தம் கபம் இம் மூன்றும் சரீரத் திலுள்ள ஒவ்வொரு வகுப்பைக் குறிப்பதாக அமையும், ஒரு தனிப்பட்ட பொருளின் பெயரல்ல என்பது விளங்கும். இயற்கை யாகவும் வியாதி நிலையிலும் இந்த வகுப்பு செயலாற்றும் போது ஏற்படும் ஒற்றுமையைக் கொண்டும், இவைகளை வளர்க்கவும் குறைக்கவும் உதவும் ஆஹார விஹாரங்களின் ஒற்றுமையைக் கொண்டும் இவை வாயு வர்க்கத்தைச் சேர்ந்தவை. இவை பித்த

வர்க்கத்தைச் சேர்ந்தவை, இவை கப வர்க்கத்தைச் சேர்ந்தவை என்றவாறு ஊஹிக்க முடிகிறது இந்த கருத்திற்கு ஆயுர்வேத மூல நூல்களில் ஆதாரம் காணேம். ஆனுல் ஹரிவம்சத்தில் உள்ள கீழ்க்கண்ட வாக்யம் இந்த கொள்கைக்கு இடமளிக்கிறது.

**கபவர்க்கே பவேத் சுக்ரம் பித்தவர்கே ச சோணிதம்.**

கபவர்க்கத்தையும் பித்த வர்க்கத்தையும் குறிப்பிடும் இந்த ச்லோகத்தைக் கொண்டு வாத வர்க்கத்தையும் அனுமானிக்க முடியும் இந்த வர்கப் பிரிவினையை மனதிற்கொண்டு வாத பித்த கபங்களின் லக்ஷணங்களை கூறும் ஆயுர் வேதத்தின் வாத பித்த கப லக்ஷணங்கள் விஸர்க்கம் ஆதானம் விக்ஷேபம் என்று தொகுக்கப் பட்டுள்ளது கவனிக்கத்தக்கது

பல பொருள்களை அதன் குண கர்மங்களின் ஒற்றுமையை ஒட்டி ஒரே வர்க்கமாகக் கொண்டது. சிகிச்ஸையில் ஏற்படக் கூடிய ஸௌகரியத்தை ஒட்டியதே என நினைக்க விடமிருக்கிறது. இவ்விதம்செயலாற்றலில் உள்ள ஸௌகரியத்திற்கு வர்க்கப் பிரிவு செய்வது ஆயுர்வேத ஆசாரியர்கள் எப்போதும் கையாள்வதே. இதன் மற்ெறுரு உதாரணம்: மர்மப் பிரகரணத்தில் பார்க்கலாம். பற்பல வகையில் அடங்கிய மர்மங்களை செயல் புரியும் குண கர்ம விசேஷங்களை ஒட்டிப் பிரித்திருப்பது இவ்வகைப் பட்டதாகும்.

யோக நூல்களிலும் வேதத்திலும் வாயுவிற்கு மூளை இருப்பிட மெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சிகித்ஸை யுக்தியை யொட்டி பக்வாசயம் முதலியவைகளை முக்கிய ஸ்தானமாக ஆயுர் வேதம் குறிப்பிடுகிறது. அவ்விதம் மூளை சைதன்யத்திற்கு ஸ்தானமாயினும் ஹிருதயமே சேதனுஸ்தானமெனக் குறிப்பிடு வதும் சிகித்ஸா யுக்தியை யொட்டித்தான்.

வாதபித்த கபங்களே முன் குறிப்பிட்ட மூன்றுவிதப் பணி களைச் செய்யவேண்டியிருப்பதால், இப்பணிகள் சரீரத்தின் ஸூக்ஷ்ம ஸூக்ஷ்மமான அணுக்களிலும் நடைபெற வேண்டியிருப்பதால் அந்தந்த ஸூக்ஷ்ம அணுக்களிலும் அதைவிட பரம ஸூக்ஷ்மமாக வாத பித்த கபங்கள் ஸஞ்சரிக்க வேண்டியிருக்கிறது. இதனுல்தான் சரீரத்திலுள்ள குழாய்கள் அனைத்திலும் வாத பித்த கபங்கள் ஸஞ்சரிக்கின்றன என ஆயுர்வேதத்தின் கொள்கை.

ஆனுலும் இவைகளுக்கென எல்லை வகுக்கப்பட்ட சில ஸ்தானங்களும் உண்டு. வாத பித்த கபங்களை ஐவகைப்படுத்தி அவைகளின் இருப்பிடத்தைக் குறிப்பிட்டுள்ளதும், வாத வர்க்கம், பித்த

வர்க்கம், கப வர்க்கம் எனப் பிரிக்கப்பட்டுள்ள உடலிலுள்ள பொருள்களின் செய்கை இந்த ஸ்தானங்களில் இந்த விசேஷத் தன்மையுடன் புலப்படுகின்றன என்பதையே தெளிவாக்குகின்றது, வாயுவின் பிராண வாயுவாக இருக்கும் விசேஷத் தன்மை கண்ட ஸ்தானத்தில் நன்கு புலப்படும். அங்கு செய்யப்படும் அதற்கான சிகித்ஸை நல்ல பலனளிக்கும். அம்மாதிரியே பிராஜகம் என்னும் பித்த சக்தியை பிராஜக பித்த ஸ்தானமான தோலில் நன்கு காணலாம். அந்த சக்தியின் புஷ்டியோ குறைவோ அந்தவிடத்தில் கிகித்ஸை செய்வதால் ஏற்படுவது என்றவாறு சிகித்ஸா யுக்திக்-கான வைகாரிக ஸ்தான நிர்தேசம் எனப்படும். இந்த ஐவகைப்-பட்ட வாத பித்த கபங்களின் ஸ்தானத்தைத் தவிர வேறு சில குறிப்பிட்ட இடங்கள் உள்ளன. உடலில் தோஷங்கள் எங்கு பிரகோபமடைந்தாலும் வியாதியை உண்டாக்குகின்றன வெனினும். இவ்விடங்களில் நோய்கள் அதிகமாக ஏற்படுகின்றன என்பதே இவ்விடங்களின் முக்கியத்துவம். வாயுவின் பிரதான லக்ஷணம் வலி. ஆனுல் இந்த வலி மென்னி இடுப்பு, கணுக்கால் முதலிய இடங்களில் அதிகமாக ஏற்படுகின்றது. அதனுல் இவ் விடங்கள் வாதத்தின் இருப்பிடங்களாகக் குறிப்பிடுகின்றன.

அவ்விதமே வாயுவிற்குப் பக்வாசயமும், பித்தத்திற்கு ஆமபக்வாசயங்களும், கபத்திற்கு மார்பகமும் பிரதான ஸ்தான-மாக வர்ணிக்கப்படுகின்றன. இந்த ஸ்தானங்கள் சில முக்கிய விஷயங்களை சிகித்ஸைக்குப் புலப்படுத்துகின்றன. தோஷங்கள் சயம் அடைவது எனும் அளவில் அதிகமாவது இந்த ஸ்தானங்-களில்தான். இந்த சயநிலை மிகவும் அதிகமாஞல் அந்த தோஷம் பிரகோபமடைந்து வெளிக்கிளம்பி மற்ற இடங்களில் பரவி அந்தந்த நோய்களை உண்டாக்குகின்றது. அதனுல் சய நிலை-யிலேயே சிகித்ஸை செய்யமுடிந்தால் அளவில் அதிகமாகும் தோஷத்தை வமன விரேசன பஸ்தி சிகித்ஸைகளாலேயே அகற்ற முடியும். இந்த சிகித்ஸாயுக்தியை உத்தேசித்தே வாதபித்தங்-களுக்கு பக்வாசயம், ஆமபக்வாசயம், மார்பகம் மூன்றையும் விசேஷ இருப்பிடங்களாகக் குறிப்பிட்டதன் காரணமாகும்.

வமனத்தின் மூலமாக ஆமாசயத்திலிருந்தோ சுவாஸாசயத்-திலிருந்தோ வெளியாவதைக் கபம் என்கிறோம். விரேசனத்தின் மூலம் குடலிலிருந்து வெளியாகும் நீரை பித்தம் என்கிறோம். குத வழியே வெளியாகும் காற்றை வாயு என்கிறோம். ஆனுல் சரீரத்தின் பல்வேறு அங்கங்களில் உள்ள வாத-பித்த-கபவர்க்-கத்தைச் சார்ந்த பொருள்களே இந்த வமன விரேசன பஸ்திக-ளால் அகற்றப்படுகின்றன என நிரூபிக்க முடியாது. இருந்தாலும்

இந்த வமனம் முதலியசிகித்ஸைகளால் கப பித்த வாயு நோய்கள் நீங்குகின்றன என்பது அனுபவ சித்தம். இந்த வமனுதிகளின் மூலம் வெளியான வாத பித்த கபங்கள்தான் வியாதி காரண மெனக் கொண்டு சிகித்ஸை செய்தபோதிலும் வியாதி தீர்கிறது. அதனுல் இவைகளுக்கும் ஸர்வாவயவ வியாபியான வாத பித்த கபங்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இந்த மல வாதம் முதலியவை அதிகமானுல் அவை அதிகமாவதும் இவை குறைந்தாலும் அவை குறைவதும் ஊஹிக்கக்கூடியவையே. அதனுல் வாதவர்க்கம் பித்த வர்க்கம் கபவர்க்கம் எனக் குறிப்பிடும் பொருள்கள் விருத்தி நிலையை அடைந்து ரத்தத்தின் மூலம் உடலில் பரவிப் பாயும்போது, தன் முக்கிய ஸ்தானமாக பக்வாசயம் புப்புஸம் முதலியவைகளை அடையும்போது அவை மலமான வாத பித்த கபங்களாக மாற்றப்பட்டு வெளியேறுகின்றன என்றும் ஊஹிக்க முடியும். அதனுல் தோஷஸஞ்சய ப்ரகோப நிலையை உணர இந்த மலமான வாத கபங்களுக்கு முக்கியத்துவமுண்டு. இந்த மலமான வாத பித்த கபங்கள் முக்கியமாக மஹாஸ்ரோதஸ் எனப்படும். உணவுக் குழாயையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. அதனுலேயே மஹாஸ்ரோதஸ்ஸின் சுத்திக்காகப் பயன்படும் வமன விரேசன பஸ்திகள் சிகித்ஸையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

---

# பாலசிகித்ஸா

## விஸர்ப நோயில்

**க்ஷார விஸர்பமும் அதன் சிகித்ஸையும்.**

தலை, எலும்பு, சந்திகள், பக்கங்கள் இவைகளில் வலி, மல பந்தம், ஜ்வரம் எல்லா நேரத்திலும் இருக்கும். வீங்கி உளுந்து போன்ற சினப்புகள் ஏற்படும். சினப்புகளின் நடுவில் சுண்ணும்பு தடவியது போலிருக்கும். வேகமாக சரீரம் முழுதும் வியாபித்து கண்கள் அதிகமாக சிவந்திருக்கும். இது க்ஷார விஸர்பம் எனப்படும்.

இதில் தேங்காய் பாலில் மஞ்சிட்டியையும் கடுக்காய் விதையையும் அரைத்து அடிக்கடி மேல் பூசவும். கஞ்ஜிக் கொட்டத்தின் வேர்ப் பட்டையையும் மஞ்சிட்டியையும் தேங்காய் பாலில் அரைத்துப் பூசலாம். அல்லது விருச்சிப்பூ, மரமஞ்சள் தோல், அதிமதுரம், சந்தனத் தூள் இவைகளைத் தேங்காய் பாலில் அரைத்தும் தடவலாம்.

**லாக்ஷாபலாதி தைலம் :**

கொம்பரக்கு, சித்தாமுட்டி வேர், அமுக்கராக்கிழங்கு. கஞ்சிக் கொட்டத்தின் வேர் மேல் தோல் இவை கொண்டு கஷாயம்; மஞ்சிட்டி, கோஷ்டம். அதிமதுரம், சந்தனத்தூள். இவைகள் கல்கம்; தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் சேர்த்துத் தைலம் காய்ச்சி வடிகட்டி கழுத்தின் கீழுள்ள பாகங்களில் தேய்த்து ஸ்னனம் செய்ய நல்லது.

**அஷ்டவல்கல தைலம் :**

வெம்பாடம் பட்டை, கடம்பம் பட்டை, எருக்கம் வேர் பட்டை ஏகநாயகத்தின் வேர் பட்டை, நால்பா மரப்பட்டை இவைகளின் கஷாயம்; கருங்காலிக் கட்டை, கல்பாசி, மஞ்சிட்டி, நன்னரி, கோரைக் கிழங்கு, கருஞ்சீரகம், விலாமிச்சை, வெட்டி வேர், திரிபலை, பூலாங் கிழங்கு, சந்தனத்தூள், ஏலரிசி, லவங்கப் பட்டை, பச்சிலை இவைகளின் கல்கம்; இவைகளை முறைப்படி தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய்யில் கலக்கி, எண்ணெய்க்குச் சமம் தயிர் தெளிவும் கூட்டிக் காய்ச்சி வடிகட்டி, கழுத்துக்குக் கீழுள்ள அங்கங்களில் தேய்த்து ஸ்னனம் செய்யலாம்.

**நீல விஸர்பமும் அதன் சிகித்ஸையும் :**

கருத்த நிறத்துடன் மிகவும் உயர்வுடன், புகை நிறமுள்ள சினப்புடனும் சினப்புகள் நடுவில் முள் செலுத்தியது போல் கூரான முகத்துடன் கூடியிருப்பதும், கண்ணீர் அதிகமாகப் பெருகுதலும், உடல் முழுவதும் கடுப்பு வலியுடன் கூடியுமிருப்பது கரும் விஸர்பமாகும்.

மரமஞ்சள் தோல், புங்கம் பட்டை, அல்லது கருவேலம் பட்டை இவைகளைத் தேங்காய் பாலிலிட்டு அரைத்து மேல் பூச வலி குறையும். அதிமதுரம், கோரைக் கிழங்கு, வரள் மஞ்சள், ஆனையடிக் கிழங்கு இவைகளைத் தேங்காய்ப் பால் விட்டரைத்து தேய்க்கலாம். திரிபலை, கோரைக் கிழங்கு இவ்விரண்டையும் அரைத்துத் தேய்க்கலாம்.

அவுரி வேர், சந்தனத் தூள், கோரைக் கிழங்கு. சிறுகீரை, திரிபலை இவைகளைக் கஷாயமாக்கித் தேன் சேர்த்துச் சாப்பிடலாம் புத்தரிச் சுண்டை வேர், ஆடாதோடை வேர், நில வேம்பு, கருஞ்சீரகம், வேப்பம் பட்டை இவைகளின் கஷாயத்தை தேன் சேர்த்துச் சாப்பிட நல்லது

தலைக்கும் உடலுக்கும் தடவ தைல முறைகளை க்ஷார விஸர்பத்தில் கூறியவாறே தயார் செய்யவும்.

# தோஷங்களின் மலநிலை

தோஷதாது மலங்களின் உற்பத்தியைக்கொண்டு நோக்கும் போது வாத பித்த கபங்கள் மூன்றும் மலங்கள் என்பது புலப்படும். ஒவ்வொரு தாதுவும் தன் புஷ்டிக்காகத் தனக்குக் கிடைத்த ரஸதாதுவின் பகுதியை தனது தேய்வை ஈடுசெய்து புஷ்டியடைய உபயோகப்படுத்திக்கொள்கின்றன. இவ்வித உபயோகத்திற்குப் பின் மிகுதியுள்ள ரஸ தாதுவின் அம்சத்தைத் தனக்கு உபயோக மில்லாததால் வெளியாக்கும்போது வெளியாக்கப்பட்ட அம்சம் அந்த தாதுவின் மலமாகின்றது. இந்த மல நிலையடைந்த பாகத் தாலும் சரீரத்தில் தாரணமும் - புஷ்டியும் ஏற்படுகிறது. இந்த மலத்தால் புஷ்டியடையக்கூடிய பொருளை மலம் என்றே குறிப்பிடு கிறோம்.

வாத பித்த கபங்களின் உற்பத்தியும் புஷ்டியும் இவ்வகையில் தன் தனது தாதுவின் ஸாரமற்ற பொருளிலிருந்தும் துணைப் பொருளாக (Byeproduct) ஏற்படுகின்றது. மலமென்பதாலேயே தள்ளவேண்டியது - முழுவதும் உபயோகமற்றது என்ற பொரு ளல்ல. இந்த மலங்களும் ஸ்வஸ்த நிலையிலும் சரீரத்தைப் பாதுகாக்கக்கூடியவையே. இந்த ஆரோக்கியநிலையில் உதவும் செயல்களைக்கொண்டே இம் மலங்களான வாத பித்த கபங்களை தாதுவென்றும் குறிப்பிடுகிறோம். இதே வாத பித்த கபங்கள் விஷமநிலையில் அதிகமாகியோ குறைந்தோ சரீரத்திற்கு நோய்களை உண்டாக்குகின்றன என்பதைக் கொண்டு தோஷங்கள் எனப் பெயர் ஏற்படுகின்றது.

உண்ட உணவு ஜடராக்னியால் பாகமடைந்து ஸாரம்கிட்டம் (மலம்) எனப் பிரிபடும்போது, கிட்டம் புரீஷமாகவும் வாயுவாகவும் பிரிபடுவதும், ரஸதாது பாகமடைந்து ஸாரமாகவும் கிட்டமாகவும் பிரிபடும்போது கபம் கிட்டமாக நிற்பதும், ரக்த தாதுவாகி பாக மடையும்போது கிட்டமாக பித்தம் ஏற்படுவதும், சரீர க்ரியா விக்ஞானத்தில் விளக்கப்பட்டுள்ளன. ஆக உற்பத்தின் நோக்கில் இவைகளை மலமாகக் கொண்டனர். ஆனால் மற்ற மலங்களைக் காட்டிலும் தனிப்பட்ட பிராகிருதவைகிருதச் செயல்களைப் புரிவதை உத்தேசித்து இவைகளைத் தனித்து ஒரு வர்க்கமாகக் குறிப்பிட்டனர். அதிலும் பிராகிருதச் செயல்களான ஆரோக் யத்தைப் பாதுகாத்து தேகத்தை வளர்க்கும் செயல்களைக்

வாய்விளங்கம், கோரை கிழங்கு நிலவேம்பு, வேப்பம் பட்டை, கடுக்காய், மருதம்பட்டை, நன்னாரி வேர், நெல்லிமுள்ளி, கண்டங்கத்திரி பேய்புடல், மஞ்சள், மரமஞ்சள் இவைகளைக் கஷாயமிட்டு, கடுகு ரோஹிணித் தூளும் தேனும் சேர்த்துச் சாப்பிடலாம். மலமிளக கறந்த சூட்டுள்ள பாலுடன் கருஞ் செவதை சூர்ணத்தைச் சாப்பிடுவதும் நல்லது.

தும்பைப்பூ, வாய்விடங்கம், கோரைக் கிழங்கு, விருச்சி வேர், பிரமிப் பூண்டு, கருங்காலி, வேப்பம்பட்டை, பேய்புடல், முள்ளுக் கத்திரி வேர் இவைகளின் கஷாயத்தைத் தேனுடன், அஞ்சனக் கல்லும் அதிமதுரமும் தூள் செய்து போட்டோ, ஜீரகத்தைத் தூள் செய்து போட்டே சாப்பிடலாம்.

அருகம்புல், பேய் புடல், புத்தரிச் சுண்டைவேர் மேல்பட்டை, விருச்சிப்பூ, கச்சோரக் கிழங்கு, பிரமிப் பூண்டு, சித்தாமுட்டி வேர், அதிமதுரம், தேவதாரு, நன்னாரி வேர், சந்தனக் கட்டை, விலாமிச்சை வேர், திரிபலை, கோரைக் கிழங்கு இவைகளைக் கஷாயம் வைத்து தேன் சேர்த்துச் சாப்பிட நல்லது.

**பலாராஸ்னாதி தைலம் :**

சித்தாமுட்டி வேர், சித்தரத்தை, சீந்திற்கொடி இவைகளின் கஷாயம் 4 பங்கு. தேங்காய் எண்ணெய் ஒரு பங்கு, வெற்றிலைச் சாறு, மஞ்சள் சாறு, சீந்தில் கஷாயம் இவை ஒரு பங்கு, தேவதாரு, வசம்பு, குந்துருக்கம், ஞாழல்பூ, தகரம், விலாமிச்சை வேர், சந்தனம், கோஷ்டம், அதிமதுரம், கோரைக் கிழங்கு, வெட்டி வேர் இவைகளை அரைத்துக் கலக்கித் தைலம் வடித்துக் கொள்ளவும். இந்த கரப்பானில் நல்லது.

**முஸ்தாகதகாதி தைலம் :**

தேத்தான், கோரைக் கிழங்கு இவைகளின் கஷாயம். அருகம் புல், தண்ணீர் விட்டான் கிழங்கு இவைகளின் ஸ்வரஸம், நன்னாரி, விலாமிச்சை வேர், அதிமதுரம், தேவதாரு. த்ரிபலை, கருஞ்சீரகம், கச்சூரிக் கிழங்கு, அன்னாசி வித்து, ஞாழல்பூ, தகர விதை, சந்தனத்தூள், வெள்ளைக் குங்கிலியம், கல்பாசி இவை களின் கல்கம்; தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் சேர்த்துத் தைலம் காய்சி வடி கட்டி தலைக்குத் தேய்த்துக் கொள்ளவும், ஸ்னானம் செய்ய கஞ்ஜிக் கொட்டத்தினிலை. இலந்தை இலை இவ்விரண்டையும் கொண்டு வென்னீர் தயாரித்துக் கொள்ளவும்.

கொண்டு இவைகளே தாதுக்கள் என்றனர். இதெல்லாவற்றையும் காட்டிலும் வியாதி உற்பத்தியிலும் மற்ற தாதுக்களேயும் மலங்களேயும் சீக்கிரமே தூஷணம் செய்யும் தன்மையைக் கொண்டு தோஷங்கள் என்ற நிலேக்கும் பெயர் வைக்கப்பட்டுள்ளது. இதன் தூஷண ஸ்வபாவத்தை சதா கவனித்துக்கொண்டே வருவதும் ஸமநிலேயில் நிலேநிறுத்துவதுமே ஆரோக்யத்திற்குத் தகுந்த பாதுகாப்பு என்ற நினேவால் இதன் தூஷண ஸ்வபாவமே எப்போதும் கவனத்திலிருக்க வேண்டுமென்று தோஷங்கள் என்றே பெயர் நிலேத்துவிட்டது.

ஜடராக்னியோ ரஸாக்னியோ ரக்தாக்னியோ மந்தமாகும் போதுதான் கிட்டபாகம் அதிகமாகி, வாத கப பித்தங்கள் அதிக அளவில் உற்பத்தி அதிகமாகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலேப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON
GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

# M|s. Kalia Brothers (Regd.)

**Wholesale Musk & Indian Drugs Merchants,**

JULLUNDUR CITY (PUNJAB)

**Gram: KALIA** — **Phone: Office - 3232**
**Resi. - 4343**

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,
கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

# கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்).

**தந்தி: KALIA** — போன்: ஆபீஸ் – 3232
வீடு – 4343

தந்தி : " அம்ருதம் "　　P. B. No. 1382.　　போன் : 26006

# தி ஆர்ய வைத்திய பார்மஸி

## (கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ் : 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்**

— எங்களுடைய கிளைகள் : —

| | | | |
|---|---|---|---|
| 1. | 23-B, பூஸா ரோடு, புது டில்லி-5 | போன் : | 585687 |
| 2. | மொய்தீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, | 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 | ,, | 85752 |
| 4. | வளிஞ்ஞம்பலம், எர்ணாகுளம், கொச்சின்-16 | ,, | 32336 |
| 5. | பிள்ளையார் கோயில் ரோடு, கண்ணனூர்-1 | ,, | 92 |
| 6. | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, | 195 |
| 7. | கடைவீதி, பொன்னானி | ,, | 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1. | ,, | 738 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, | 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18 | | 33758 |
| 12. | இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2 | ,, | 4891 |
| 13. | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2 | | 842 |
| 14. | No. 263, 64. 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி) | | 31 |
| 15. | ஹல்வா பஜார் ரோடு, கள்ளிக்கோட்டை-1 | | |

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங் ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18
(போன் : 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராம வாரியார்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

# க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும், மற்றும் நரம்புகள சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்,

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்துவந்தால் வாத ரோகங்களும் விருத்தாப்பியத்தினால் ஏற்படும நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00 12 ML. ரூ. 3-75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது].

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
## பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
போன் எண் : 4202

## சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பத்திமூன்று ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு:

**ஸௌபாக்கிய ரஸாயனம்**

ஜீர்ண சக்தி, ரத்தவிருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்.
300 கிராம் பாட்டில் ரூ. 5.

**பயஸ்யா**

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.
300 கிராம் பாட்டில் ரூ. 5-50
— தபால் செலவு தனி —


சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில்
தயாரிக்கப்பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

# இம்ப்காப்ஸ்

## புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.



இம்ப்காப்ஸ் இந்திய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூல்களில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்பான முறையில் பின்பற்றி ஆயுர்வேத, சித்த, யூனானி மருநதுகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. புராதன மருந்துகளை தயாரிப்பதில் நவீன பாக்கிங் முறைகளையும் இயந்திரங்களையும் இம்ப்காப்ஸ் பயன்படுத்தி வருகிறது. சுதேச மூலிகைள் பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்ப்காபஸ் புராதன இந்திய மருந்துகள் சம்பந்தமாக ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கப் பாடுபடுகிறது.

impcups

**உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்**

இம்ப்காப்ஸ் மருந்துகள் எல்லா முக்கிய மருந்து கடைகளிலும் கிடைக்கும்

**இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.**

அடையார், சென்னை 20.

**விற்பனை நிலையங்கள்:** 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8652

48, ஸொத் மாஸி தெரு, மதுரை. போன்: 30875

16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

aaa/IMP/961/M TAM

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்டகால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கைகண்ட பலனளிக்கும்

# "சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைகட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

## சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர் (S. Ry.)

Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2
Printed at Githa Press, Tiruchirapalli-2.